**செய்தி வெளியீடு எண்:823** **நாள்:24.12.2007**

## செய்தி வெளியீடு

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துச் செய்தி

தமிழகம் முழுவதும் மிகுந்த மகிழ்ச்சியுடனும், எழுச்சியுடனும் கிறிஸ்துமஸ் திருநாளைக் கொண்டாடும் கிறிஸ்தவ சமுதாய மக்கள் அனைவருக்கும் தமிழக அரசின் சார்பில் என் இதயம் கனிந்த இனிய கிறிஸ்துமஸ் திருநாள் நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

தமிழகத்தில் வாழும் அனைத்துச் சமுதாய மக்களும் இணக்கமுடன்கூடி இன்பவாழ்வு காண இயன்ற அனைத்தையும் நிறைவேற்றிட உறுதிபூண்டு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிவரும் தமிழக அரசு இந்த ஆண்டில் இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுபோலவே, கிறிஸ்தவர்களுக்கும் 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிச் சிறுபான்மைச் சமுதாயத்தின் சீரிய நண்பனாகத் திகழ்கிறது.

“அனைத்திற்கும் அன்பே அடிப்படை” என்ற இயேசுநாதரின் தொண்டுள்ளம் காரணமாக, “கிறிஸ்தவம்” என்ற சொல்லில் எளிமை, மன்னிக்கும் குணம், ஈகை, பரோபகாரம் போன்றவை அடங்கியிருப்பதாகக் கூறுவர். அந்த வகையில் இயேசுபெருமான், “அடுத்தவனை நேசி; உன் எதிரியிடமும் அன்பு காட்டு; உன்னைச் சபிப்பவர்களை ஆசீர்வாதம் செய்; உன்னை வெறுப்பவர்களுக்கும் உதவி செய்; உன்னைத் தூற்றுபவர்களையும் போற்று” என்று கூறி மக்களிடம் சகிப்புத் தன்மையை–அன்பை வளர்க்கிறார்.

இயேசுபெருமான் உரைத்த இந்த நெறிபோற்றி அன்பர்கள், நண்பர்கள் மீது மட்டுமல்லாமல், காழ்ப்புணர்வும், அகங்காரமும் கொண்டு நம்மைக் காய்பவர்கள் மீதும் அன்பைப் பொழிவோம்! சமுதாயத்தில் வேற்றுமைகளைக் களைவோம்! அமைதியையும் நல்லிணக்கத்தையும் வளர்ப்போம்! ஏழை எளியோர், இயலாதோர், நலிந்தோர், மெலிந்தோர் என எல்லோரும் ஏற்றம்பெற இடையறாது உழைப்போம்! வளம் காண்போம் என இந்த இனிய கிறிஸ்துமஸ் திருநாளில் சூளுரைத்துச் செயல்படுவோமாக!

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.